**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No. 333/2026.**

**Alangayam Police Station**

**Cr.No.615/2021**

| | | |
|---|---|---|
| 1. Deposition of Witness for | : | PW 4 |
| 2.Name | : | திரு.மணிகண்டன் |
| 3.Father's Name | : | சங்கர் |
| 4.Village | : | டி ஆண்டியூர் |
| 5.Taluk | : | அரூர் |
| 6.Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| 7.List witness | : | Additional Witness |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** in accordance with the provision of Act X of 1873 of the day of **29.06.2026.**

எதிரி ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம்– 04.42 P.M.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்– 05.00 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்போது ஆலங்காயம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். (இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர்கள் திரு.ஈஸ்வரன், திரு.கார்த்திக், மற்றும் திரு.வெங்கடேசன் ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும், அவர்களின் கையெழுத்து எனக்கு பரீட்சயம். மேற்படி சாட்சியங்களுக்காக சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தயாரித்த ஆவணங்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துரைகளை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்ய எதிரி தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.) கடந்த 17.02.2021 அன்று சுப்பிரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று ஆலங்காயம் காவல் நிலைய குற்ற எண்.15/2021, U/s 379 IPC ன் படி 17.02.2021ம் தேதி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **<u>அ.த.சா.ஆ.2.</u>** பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 17.02.2021 அன்று பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் உதயகுமார் மற்றும் பழனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **<u>அ.த.சா.ஆ.3.</u>** மாதிரி வரைப்படம் **<u>அ.த.சா.ஆ.4</u>**. வழக்கின் சாட்சிகளான சுப்பிரமணி, ரஜினி, புனிதா, உதயகுமார், பழனி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். பின்னர் பணிமாறுதல் காரணமாக இவ்வழக்கு கோப்பினை திரு.கார்த்திக் காவல் உதவி ஆய்வாளர்

விசாரணையைத் தொடர்ந்தார். இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் வாகனத் தணிக்கை செய்துகொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த நேதாஜி நகர் பக்கம் இருந்து வந்த TN 83 B 2338 Honda shine என்ற இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் வாகனத்தை நிறுத்த சொல்லியும் நிறுத்தாமல் சென்றவரை போலீசார் மடக்கிப் பிடித்து விசாரிக்க வாகனத்தை ஓட்டிய நபர் முருகன் த/பெ நாராயணமூர்த்தி, வயது 24 வாணியம்பாடி நகர காவல் நிலைய குற்ற எண்.51/2021 வழக்கில் திருடுபோன வாகனம் என்று சொல்லி அந்த வாகனத்தை கைப்பற்றியும் எதிரி முருகன் என்பவரை விசாரிக்க எந்தவித துன்புறுத்தலோ அச்சுறுத்தலோ ஆசை வார்த்தையன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளான தன்வீர் அகமது, ஆகிப் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து இருசக்கர வாகனங்களை கைப்பற்றுதல் மகசர் மூலமாக அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.5** மற்றும் படிவம் 91 **அ.த.சா.ஆ.6**. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.த.சா.ஆ.7**. இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதசபிரிவு 379 படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

இவ்வழக்கில் நீங்கள் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கீரீர்கள் என்றால் சரிதான். 30.07.2020 வாகனம் திருடுபோனதாகசொல்லி 17.02.2021 அன்று காலை 11.00 மணிக்கு புகார் மனுவை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். காலதாமதமாக அளிக்கப்பட்ட புகாருக்கு காரணம் கோரவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம்

எதுவும் திருடு போகவில்லை எனவும் வாணியம்பாடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கை வைத்து புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.06.29 15:50:18 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.